# மாதவிடாய்

**மாதவிடாய்:** பெண்களுக்கு பருவ வயதை எட்டியபின் வெளிப்படும் இரத்தப்போக்கு **ஹைஜ்து** அல்லது மாதவிடாய் எனப்படும். இது அவர்கள் பருவ வயதை அடைந்துவிட்டனர் என்பதற்கான அடையாளமாகும். இதன் காலக் கட்டம் குறைந்தது ஒரு நாள் ஒரு இரவு அளவிற்கும் அதிகமாக பதினைந்து நாட்கள் வரையிலும் இருக்கும். (ஞாபகமிருக்கட்டும் ஒவ்வொருவருடைய மாதவிடாய்க் காலமும் வேறுபட்டதாகவே இருக்கும்).

**பிள்ளைப்பேறுகால இரத்தப்போக்கு:** குழந்தை பிறப்புக்குப்பின் வெளிப்படும் இரத்தம் **நி∴பாஸ்** அல்லது இரத்தப்போக்கு எனப்படும். இதற்கான குறிப்பிட்ட காலம் ஒன்றும் இல்லை, குழந்தை பிறந்த பிறகு சிறிது காலத்திற்குப் பின்பே இரத்தப்போக்கு நின்றுவிடலாம்,இது நாற்பது நாட்கள் வரையிலும் தொடரலாம்.

## மாதவிடாய் மற்றும் பிள்ளைப்பேறுகால இரத்தப்போக்கு

1 **இந்நாட்களில் கடமையான, ந∴பிலான எந்தத் தொழுகையும் தடுக்கப்பட்டுள்ளது.** இவ்வாறே, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வகையிலான சஜ்தா, திருக்ஃகுர்ஆன் ஓதும் நிலையிலான சஜ்தாவும் தடுக்கப்பட்டுள்ளது. ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்களிடம் கேட்கப்பட்டது, மாதவிடாய் உள்ள ஒரு பெண் விடுபட்ட நோன்பு நோற்கவேண்டும், ஆனால், விடுபட்ட தொழுகையினை மீண்டும் நிறைவேற்ற வேண்டியதில்லையா? அதற்கு அவர்கள் கூறினார்கள், எங்களுக்கு இவ்வாறு ஏற்படும்போது எங்களுக்கு விடுபட்ட நோன்பு நோற்கவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது மற்றும் விடுபட்ட தொழுகையினை மீண்டும் நிறைவேற்றவேண்டும் என்று கூறப்படவில்லை.(முஸ்லிம், அபூ தாவூத்).

2 **இந்நாட்களில் கடமையான, ந∴பிலான எந்த நோன்பும் தடுக்கப்பட்டுள்ளது** இருப்பினும், விடுபட்ட நாட்களுக்கான நோன்பு தூய்மையடைந்தபின் நிறைவேற்றப்படவேண்டும்

3 **கஅபாவின் தவா∴ப் செய்வது தடுக்கப்பட்டுள்ளது** ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் ஹஜ் நிறைவேற்றுவதற்காகச் சென்றுகொண்டிருந்தார்கள், அவர்களுக்கு மாதவிடாய் வந்துவிட்டது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், மற்ற அனைத்தையும் செய்து முடித்துக்கொள்ளுங்கள், தவாஃப் மட்டும் செய்யவேண்டாம், தூய்மையடைந்துவிட்டபின் அதனை நிறைவேற்றுங்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).

www.uzairiahi.com

4 **இந்நாட்களில் பெண்கள் திருக்ஃகுர்ஆனைத் தொடவும் கூடாது, ஃகுர்ஆன் ஓதவும் கூடாது** இருப்பினும், மனனம் செய்துள்ள ஃகுர்ஆன் வசனங்களை மறந்துவிடக்கூடாது என்பதற்காக அவற்றிலிருந்து சிறிதளவு ஓதலாம் என சில மார்க்கச்சட்ட அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறே மாணவிகள் மற்றும் திருக்ஃகுர்ஆன் கற்பிக்கும் ஆசிரியைகள் கையுறைகளை அணிந்துகொண்டு பாடங்களை நடத்தலாம், இதில் எந்தத் தவறுமில்லை.

5 **மஸ்ஜிதுக்குள் வரக்கூடாது** தேவையின்றி அங்கே உட்காரவும் கூடாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ أُحِلُّ الْمَسْجِدَ لِحَائِضٍ وَلاَ جُنُبٍ

*பொருள்: மாதவிடாய் உள்ளவர்கள் மற்றும் குளிப்பு கடமையாகிவிட்டவர்களுக்கு மஸ்ஜிதில் பிரவேசிப்பது அனுமதிக்கப்பட்டதல்ல (அபூதாவூத்)*

6 **உடலுறவு கொள்வது தடுக்கப்பட்டுள்ளது** *அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

فَٱعۡتَزِلُواْ ٱلنِّسَآءَ فِي ٱلۡمَحِيضِ وَلَا تَقۡرَبُوهُنَّ حَتَّىٰ يَطۡهُرۡنَ ﴿٢٢٢﴾ (البقرة:222)

*பொருள்: ஆகவே, மாதவிடாய்க் காலத்தில் பெண்களைவிட்டு விலகி இருங்கள். மேலும், அவர்கள் தூய்மையாகும்வரை அவர்களை அணுகாதீர்கள் (அல் பஃகரஹ்:222)*

7 **இந்நிலையில் மனைவிக்குத் தலாஃக் கொடுப்பது தடுக்கப்பட்டுள்ளது** இவ்வாறு ஒருவர் செய்துவிட்டாலும் தலாஃக் நிறைவேறிவிடும், ஆனால், ஆண் குற்றவாளியாகிவிடுகிறான்.

சில சமயங்களில் பெண்களுக்கு சில நோய்களின் காரணமாக மாதவிடாய் தவிர மற்ற காரணங்களினாலும் இரத்தப்போக்கு ஏற்படும். இந்த இரத்தப்போக்கு வயது வருவதற்கு முன்பு சாதாரண மாதவிடாய் காலத்திற்குப் பின்பு மற்றும் இறுதி மாதவிடாய் நிலை எட்டிய பின்பும் ஏற்படலாம். இதில், பெண் அசுத்தமாவதில்லை, அனைத்து வணக்க வழிபாடுகளையும் நிறைவேற்றலாம் மற்றும் தூய்மை நிலையிலுள்ள ஒரு பெண்ணைப்போன்று அனைத்துச்செயல்களையும் செய்யலாம். இருப்பினும், ஒவ்வொரு தொழுகைக்காகவும் புதிதாக உளூ செய்துகொள்ளவேண்டும், இரத்தப்போக்கு தொடர்ந்தால் அதனைக் கழுவிக்கொள்ளவேண்டும் மற்றும் கசிந்து ஒழுகாத வகையில் ஒரு துணியை வைத்துக்கொள்ளலாம்.

www.uzairlahi.com

**சட்டப்படி அசுத்தம் என வகைப்படுத்தப்பட்டவற்றிலிருந்து தூய்மை பெறுதல்**

சட்டப்படி அசுத்தங்கள் இரு வகைப்படும், ஒன்று **ஹதத்ஸ் அஸ்ங்கர்** உதாரணமாக, மல ஜலம் கழிக்தபின் ஏற்படுவது. இதிலிருந்து உதூ வின்மூலம் தூய்மையடைந்துவிடலாம். இரண்டாவது **ஹதத்ஸ் அக்பர்** உதாரணமாக, ஜனாபத் எனப்படும் உடலுறவின் காரணமாது, இதிலிருந்து கடமையான குளிப்பின் மூலம் மட்டுமே தூய்மையடைய முடியும். மேற்கூறப்பட்ட இரண்டுவிதமான அசுத்தங்களிலிருந்தும் தூய்மைப் பெறுவதற்கு தண்ணீர் கிடைக்காத நிலையில் அல்லது வேறு எந்தக் காரணத்தினாலும் தண்ணீர் பயன்படுத்த முடியாதபோது தயம்மும் செய்துகொள்ளவேண்டும்.

* * *

www.uzairfalahi.com